# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:229 /மா/2025**

**நாள்: 09.07.2025**

திரு. வாசுதேவன் .............. மனுதாரர்
சென்னை

மண்டலஅலுவலர் ................ எதிர் மனுதாரர்
மண்டலம் 10
பெருநகர சென்னைமாநகராட்சி

சென்னை 17, தி. நகர், சீரணிபுரம், கதவு எண் 37/19 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வாசுதேவன் என்பவரின் 29.04.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 30.04.2025 அன்று பெறப்பட்டு 229/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–17, தி. நகர், சீரணிபுரம், கதவு எண் 37/19 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வாசுதேவன் என்பவர் 29.04.2025 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சென்னை–24, கோடம்பாக்கம், ரயில்வே பார்டர் ரோடு, எண் 31–ல் 8அடி அகலம் உள்ள தெருவில் விதி மீறி 4மாடி JV மருத்துவ மனை கட்டி உள்ளனர். இந்த கட்டிடத்தை முற்றிலும் லாக்கன் சீல் வைத்து இடிக்கவும், கோடம்பாக்கம் ரயில்வே தண்டவாளத்தை ஒட்டியபடி JV மருத்துவமனை கட்டி உள்ளனர். கார்ப்பேரஷன் மண்டலம் 10 அலுவலகம் கமர்ஷியல் கட்டிடம் கட்ட எந்த ஆண்டு எந்த தேதி அனுமதி கொடுத்தீர்கள். வீடு கட்ட அனுமதி கொடுத்ததாக தெரியப்படுத்தி உள்ளீர்கள். ஆனால் அனுமதி கொடுத்த அதிகாரி பெயரும் பதவின் பெயரும் பதிவேட்டில் இல்லை என்று ஆவணத்தின் மூலம், தெரியப்படுத்தி உள்ளீர்கள். 2018ஆம்ஆண்டு JV மருத்துவமனை மீது புகார் செய்தேன். அரசு அனுமதி இல்லாமல் விதி மீறி கட்டிய கட்டிடத்தை லாக்கன் சீல் வைத்து இடிக்கவும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கார்ப்பேரஷன் மண்டலம் 10, அலுவலர்கள் JV மருத்துவமனை இருக்கும் இடத்தில் போலியாக 2 மாடி வீடு கட்ட அனுமதி கொடுத்ததாக லெட்டர் மூலம் தெரியப்படுத்தி உள்ளார்கள். உண்மையில் வீடு கட்ட அனுமதி கடிதம் கொடுத்து இருந்தால் மருத்துவமனை 4மாடி கட்டும் போதே கார்ப்பேரஷன் அதிகாரிகள் லாக்கன் சீல் வைக்க வேண்டியது தானே.

2018-ம் ஆண்டு புகார் செய்து உள்ளேன். புகாருக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் JV மருத்துவமனை உரிமையாளர் இடம் கையூட்டு வாங்கிக் கொண்டு 1985-ம் ஆண்டு, 2 மாடி வீடு கட்ட அனுமதி கொடுத்ததுபோல் செட்டப் செய்து மனுதாரருக்கு 2018-ம் ஆண்டு போலி லெட்டர் கொடுத்து உள்ளார்கள். கார்ப்பேரஷன் மண்டலம் 10 அலுவலகம் போலி லெட்டரை ஏற்க முடியாது. 2மாடி வீடு கட்ட அனுமதி கொடுத்ததாக கொடுத்த லெட்டரை கேன்சல் செய்யவும், CMDA அலுவலகம் JV மருத்துவமனை 4 மாடி கட்ட அனுமதி தரவில்லை. முற்றிலும் கார்ப்பேரஷன் CMDA 2பேரும் வீடு கட்டவும், மருத்துவமனை கட்டவும் அனுமதி தரவில்லை. 8 அடி அகலம் உள்ள தெருவில் 4 மாடி மருத்துவமனை கட்டி பொதுமக்களுக்கு வாகனம் போக வழியில்லாமல் போக்குவரத்து நெரிசல் உண்டாக்கி உள்ளனர். மருத்துவமனைக்கு வரும் கஸ்டமர்கள் வாகனம் நிறுத்த இடம் இல்லாத காரணத்தால் மருத்துவமனை எதிரில் நிறுத்தப்படுகின்றன. பொதுமக்களுக்கு போக்குவரத்து நெரிசல் உள்ளன. 4 மாடிகட்டிடத்திற்கு லிப்ட் வசதி உள்ளன. தீ அணைப்பு அதிகாரி இடம் அனுமதி வாங்கி உள்ளாரா ரயில் தண்டவாளம் ஒட்டியபடி மருத்துவமனை கட்டி உள்ளனர். 100 அடி இடைவெளி இருக்கவேண்டும். சட்டதிட்டங்களை மதிக்காத கட்டிய JV மருத்துவமனை லாக்கன் சீல் வைத்து இடிக்கவும்.

2019–ஆம் ஆண்டு தொடர்ந்த வழக்கு 2024–ம் ஆண்டு நீதி மன்ற ஆணை ஏற்க கூடிய ஆணையாக இல்லை. இந்த ஆணையை ரத்து செய்யவும், மீண்டும் புதியதாக ஆணை பிறப்பிக்கவும். புதியதாக ஆணை பிறப்பிக்கும் வரை 2 மாடிக்கு மேல் லாக்கன் சீல் வைத்து இடிக்கவும் என்ற ஆணைக்கு அபராதம் கட்டகூடாது. தடைவிதிக்கவும் 2025–ம் ஆண்டு 3 மாதம் CMDA அலுவலர் லாக்கன் சீல்வைப்பதாக கூறினார். அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட JV மருத்துவமனையை முழுமையாக இடிக்கவும் மீண்டும் புகார் செய்து உள்ளேன். லாக்கன் சீல் அகற்ற கூடாது இடிக்கவும். W.P.No.21671/28.03.2024 தேதி ஆணை பிறப்பித்த நீதியரசர் வீடு கட்ட அனுமதி கொடுத்ததாக தெரியப்படுத்தி உள்ளனர். நீங்கள் எப்படி 4 மாடி மருத்துவமனை கட்டலாம். அனுமதி இல்லாமல் என்று கேள்வி எழுப்பி முழுமையாக லாக்கன் சீல் வைத்து இடிக்கவும் என்று ஆணைப் பிறப்பிக்க வேண்டியது தானே. ஏற்கனவே போலியான ஆவணம் செட்டப் லெட்டர் கொடுத்து உள்ளன. கார்ப்பேரஷன் மண்டலம் 10ன் அலுவலர் அதாவது 2 மாடி வீடு கட்ட அனுமதி கொடுத்ததாக தெரியப்படுத்தி உள்ளன. தற்போது போலி லெட்டர் என்று தெரியவருகிறது.

JV மருத்துவமனை உரிமையாளர் சட்ட விரோதமாக 4 மாடி கட்டி உள்ளன. வீட்டு வசதி வாரிய இடம், குடிசை மாற்று வாரிய இடம் ஒரு நபருக்கு ஒரு அலாட் மேல் இருக்கக்கூடாது என்று விதி உள்ளன. இவர்களுக்கு 5அலாட் உள்ளன. டெய்லர் எஸ்டேட் தெருவில் 2 வீடு அந்த 2 வீடும் மருத்துவமனை பின்புறம் ரயில்வே பார்டர் ரோட்டில் ஒரு வீடு சென்னை பல்லாவரத்தில் 2 வீடு மொத்தம் 5 வீடு உள்ளன. இன்னும் பல வீடுகள் இருப்பதாக தெரியவருகிறது. இவருக்கு அரசியல்வாதி, அரசு ஊழியர்கள் உதவி அதிக அளவில் இருப்பதாக தெரியப்படுத்தினார்கள். ஆகையால் இந்திய அரசியல் அமைப்பு சட்டதிட்டங்களை மதிக்கமாட்டாராம். 31, ரயில்வே பார்டர் ரோடில் உள்ள இடம் வீடு வசிக்க கூடிய இடம் 8 அடி அகலம் உள்ள தெருவில் அரசு அனுமதி இல்லாமல் விதி மீறி கட்டிய மருத்துவமனை 4 மாடி கட்டிடத்தை லாக்கன் சீல் வைத்து இடிக்கும்படியும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்"என்றுதெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலரின் கடிதம் எண்.ம.அ.10.ந.க.எண்.112881/2025, நாள் 04.01.2025 மற்றும் 26.03.2025–ல் பின் வருமாறு தெரிவித்துள்ளார். அதில் –

"மண்டலம் **10,** பகுதி **31,** வார்டு **132**குட்பட்ட JV மருத்துவமனை ரயில்வே பார்டர் சாலை, கோடம்பாக்கம், சென்னை **24** என்ற முகவரியில் உள்ள அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது திரு வாசுதேவன் அவர்களால் மாண்பமை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.21671 of 2019 தொடுக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதில் JV மருத்துவமனை இரயில்வே பார்டர் சாலை, கோடம்பாக்கம், சென்னை 24 என்ற முகவரியில் உள்ள மருத்துவமனை கட்டிடமானது பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (திட்டஅனுமதி PPA/1432/B/139/85& கட்டிட அனுமதி BA/273/85) எனவே சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சுற்றறிக்கையின்படி பெருநகர் சென்னை வளர்ச்சி குழுமத்தில் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரமாணபத்திரம் (counter affidavit) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மாண்பமை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.21671 of 2019 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தின் சுற்றறிக்கையின்படி :–

"vi) Chennai Metropolitan Development Authority shall take enforcement action under section 56 & 57 of T&CP Act, 1971 on those cases for which CMDA has issued planning permission…"என்பதின் அடிப்படையில் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தின் மூலம் திரு வாசுதேவன் அவர்களது புகாரில் தெரிவிக்கப்பட்ட கட்டிடத்திற்கு Notice for compliance of planning permission in respect of unauthorized development carried out in contravention of planning permission Form IV (See rule (5b) என்ற தாக்கீது கடந்த **02.01.2024** அன்று வழங்கப்பட்டு தொடர் அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தின் சுற்றறிக்கையின்படி (Circular of the Member Secretary, Chennai Metropolitan Development Authority vide Proc.No.RT/19948/2011 dated 02.12.2016) மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.வாசுதேவன் என்பவர் தொடுத்த வழக்கில் (W.P.No.21671 of 2019) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் உரிய அமலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் (W.P.No.21671 of 2019) 28.03ல்.2024 அன்று மாண்மை சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்த ஆணை பின்வருமாறு:–

"**4. We have recorded the submission of learned counsel for respondent 1 that steps are being taken for restoring the subject hospital in compliance with the planning permission . Further action would be taken in accordance with law.**

**5. The aforesaid submission is sufficient. In the light of that, the present writ petition stands disposed of. There shall be no orders to costs'.**

மேலும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்த ஆணையின்படி விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது அமலாக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு கடந்த 20.01.2025 அன்றுகடிதம் அனுப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் கடந்த 07.03.2025 அன்று விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.மனுதாரரின் மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் குறிப்பிட்ட சென்னை 24 கோடம்பாக்கம், ரயில்வே பார்டர் ரோடு, கதவு எண் 31ல் உள்ள கட்டிடம் தொடர்பாக மனுதாரரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.21671 of 2019 தொடர்ந்த வழக்கில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 28.03.2024 நாளிட்டு பின்வரும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

" xxx xxx

3. **In the present writ petition, the petitioner is not challenging the permission for construction. The said permission is granted in the year 1985 for construction of stilt + 2 floors.**

**4. We have recorded the submission of learned counsel for respondent 1 that steps are being taken for restoring the subject hospital in compliance with the planning permission. Further action would be taken in accordance with law.**

**5. The aforesaid submission is sufficient. In the light of that, the present writ petition stands disposed of. There shall be no orders as to costs".**

மேலும், இத்தீர்ப்பின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் 07.03.2025 அன்று மேற்கண்ட கட்டிடத்தின் மீது அமலாக்க துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மாவட்ட வருவாய் அலுவலர், மண்டல அலுவலர் தனது கடிதம் எண்.ம.அ/10 ந.க.எண்.1128881/2025 நாள் 26.03.2025–ன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சூழ்நிலையில், மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கில் (W.P.No.21671 of 2019) மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் மேற்கண்ட கட்டிடத்தின் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுவதால், மனுதாரரின் மனு மீது மேல் நடவடிக்கை எடுக்கவேண்டி அவசியம் எழவில்லை என இம்முறை மன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணைவெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு.வாசுதேவன்,
37/19 சீரணிபுரம், தி. நகர்,
சென்னை 600 017.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளி,
சென்னை–600 003.

3) இயக்குநர்,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
தாளமுத்து நடராஜன் மாளிகை,
காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.

4) மண்டலஅலுவலர்,
மண்டலம் 10,
பெருநகரசென்னைமாநகராட்சி,
எண் 117, என்.எஸ்,கே. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை 600 024.

5) இணைஇயக்குநர்/
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறை மன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/7/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032